DEPOSITON OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | | |
|---|---|---|
| Calender | } | |
| Miscellaneous | } | |
| Preliminary Register | } | |
| Sessions | } | Case No.SC.115/2023 |
| Deposition of Witness | { | PW3 |
| | { | Prosecution |
| | { | |

| | |
|---|---|
| Name | :செல்லம்மாள் |
| Father's Name | :வெங்கடாசலம் |
| Taluk | : --- |
| Calling | :விவசாயம் |
| Religion | :இந்து வன்னியர் |
| Age | :45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.01.2024

2024 ம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.3 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் தற்போது செட்டிபட்டி, கப்பராயன் காட்டில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1,2 யை தெரியும். அ.சா.1 என் கணவர், அ.சா.2 என் கொளுந்தனார். எங்களுக்கும், எதிரிகளுக்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 5 வருடத்திற்கு முன்பு ஒரு ஞாயிற்று கிழமை அன்று தேதி, மாதம், வருடம் தெரியாது, காலை 9.30 மணிக்கு நானும் என் கணவர் மற்றும் என் மாமியார் ஆகியோர் எங்கள் வீட்டில் இருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் 3 பேரும் எங்களுக்கு சொந்தமான காட்டில் மண் அள்ளி கொண்டிருந்தார்கள். அதை நாங்கள் வீட்டில் இருந்து பார்த்துவிட்டு எங்கள் காட்டிற்கு சென்று எதிரிகளிடம் என் கணவர் எங்கள் காட்டில் மண் அள்ளாதீர்கள் என்று சொன்னார். அப்போது 1 ம் எதிரி இங்கு எங்கடா உனக்கு காடு இருக்கிறது தேவடியா பையன், கண்டாரோளி பையனே என்று திட்டி 1 ம் எதிரி கையில் வைத்திருந்த கருக்காறுவாளால் இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லி

கொண்டு என் கணவரின் கழுத்தில் வெட்ட வந்தார். அப்போது என் கணவர் குனிந்து கொண்டதால் இடது தோள்பட்டையின் பின்பக்கம் காயம் ஆனது. 2ம் எதிரி என் கணவரை கீழே தள்ளி நெஞ்சின் மீது அமர்ந்து தலையை அமுக்கி பிடித்து கொண்டார். அப்போது 1ம் எதிரி என் கணவரின் இரண்டு கால் தொடையிலும் கருக்காறுவாளால் அறுத்து காயம் ஆக்கினார். வலது கால் பாதத்திலும் அறுத்து காயம் ஆக்கினார். நான் அவர்களை தடுப்பதற்காக ஓடிய போது 3ம் எதிரி என் தலை முடியை பிடித்து இழுத்து என் முதுகில் எட்டி உதைத்தார். அப்போது என் கொளுந்தனார் ஓடி வந்து வெட்டாதீங்க டா என்று எதிரிகளை தடுத்த போது 1ம் எதிரி நீ யாருடா நீயும் செத்து தொலைந்து போடா என்று சொல்லி அவருடைய வலது கழுத்தை வெட்ட வந்த போது அவரும் குனிந்து கொண்டதால் கழுத்தில் இரத்த காயம் ஆனது. என் கொளுந்தனார் 1ம் எதிரியின் கையை பிடிக்க முயன்ற போது வலது கை பெருவிரல் அருகில் காயம் ஆனது. அப்போது 2ம் எதிரி கருங்கல்லை எடுத்து வந்து என் கொளுந்தனார் தலை மீது போட்டார். அதனால் என் கொளுந்தனார் கீழே விழுந்துவிட்டார். அதனால் என் கொளுந்தனார் மயக்கம் ஆகிவிட்டார். அப்போது அந்த சம்பவத்தை பார்த்து கொண்டிருந்த பழனிசாமி, கந்தசாமி, செல்வம், செல்லப்பன், குமார் மற்றும் பலர் எதிரிகளை விலக்கிவிடுவதற்காக ஓடி வந்தார்கள். அதனால் எதிரிகள் எங்களிடம் நீங்கள் இன்று தப்பித்து கொண்டீர்களாடா உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று அரிவாளை காட்டி சொல்லிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கருங்கல் 2ம் எதிரி பயன்படுத்தியது தான். என்னிடம் காண்பிக்கப்படும் கருக்காறுவாளை தான் 1ம் எதிரி வைத்திருந்தார். அதன் பிறகு செல்லப்பன், குமார் ஆகியோர் என் கணவர் மற்றும் கொளுந்தனாரை எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். பின்பு மேல் சிகிச்சைக்காக சேலம் விநாயகா மிசன் மருத்துவமனைக்கு அவர்கள் அனுப்பி வைத்தார்கள். அங்கு சுமார் 5 முதல் 6 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார்கள். அதன் பிறகு எடப்பாடி அரசு மருத்துவமனையில் சுமார் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார்கள். சம்பவம் தொடர்பாக என் கணவர் போலீஸ் புகார் கொடுத்தார். அந்த புகார் சம்பந்தமாக ஆய்வாளர் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

என் கணவரின் தாத்தாவும், 1ம் எதிரியின் அப்பாவும் ஒரு ஆண்டியப்பனும் சகோதரர்கள். அவர்கள் அனைவருக்கும் தலா 43 செண்ட் நிலம் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வகையில் என் மாமனாருக்கு 43 செண்ட் ஒதுக்கப்பட்டு அதை நானும், என் கணவரும் அனுபவித்து வருகிறோம். எங்கள் வீடும், எதிரிகளின் வீடும்

அருகருகே உள்ளது. எங்கள் வீடு கல்லம்பாளையம் செல்லும் தார்சாலையை ஒட்டி உள்ளது. அந்த தார்சாலையில் இருந்து கிழக்கே செல்லும் மண் ரோட்டில் சம்பவம் நடந்த காடு உள்ளது. அந்த மண் ரோட்டிற்கு தெற்கு புறமாக காவேரி ஆறு உள்ளது. வடக்கு புறமாக எங்கள் காடு உள்ளது. எங்கள் நிலத்திற்கும் மேற்கில் எதிரிகளின் நிலம் உள்ளது. அதே போல் எங்கள் நிலத்திற்கும் வடக்கு புறமும் எதிரிகளின் நிலம் தான் உள்ளது. எங்கள் நிலத்தில் நாங்கள் ஏற்கனவே மண்ணை அள்ளிவிட்டோம் என்றால் சரிதான். அதனால் எதிரிகளின் நிலம் எங்களின் நிலத்தை விட 3 அடி உயரம் அதிகமாக உள்ளது. சம்பவத்தின் போது எங்கள் நிலத்தில் முள் வேளி முளைத்து எதிரிகள் நிலத்தில் சாய்ந்து இருந்தது என்றால் சரியல்ல. அந்த இடம் காலியாக தான் இருந்தது. எதிரிகள் மண் வெட்டி கூடையை வைத்து மண் அள்ளினார்கள். சம்பவத்தின் போது என் மாமியார் தான் முதலில் சென்று எதிரிகளிடம் எதற்கு டா மண் அள்ளுகிறீர்கள் என்று கேட்டார். சண்டை எதிர்பாராமல் தான் நடந்தது என்றால் சரிதான். சம்பவத்தின் போது நானும், என் கணவர், என் மாமியார் மட்டும் தான் இருந்தோம் என்றால் சரிதான். சண்டையை நான் விலக்கிவிடவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடமானது பட்டா நிலம் தான். பழனிசாமி, கந்தசாமி ஆகியோர் என் கணவரின் மாமன் மகன்கள் என்றால் ஒன்றுவிட்ட மாமன் மகன்கள். செல்வம் எனக்கு மருமகன் என்றால் சண்டையின் போது இல்லை. என் நிலத்திற்கும் வடக்கில் உள்ள எதிரிகளின் நிலத்தில் தான் சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. எங்கள் நிலத்தில் தான் நடந்தது. நாங்கள் மண் அள்ளிய இடத்தில் தான் சம்பவம் நடந்தது. என் கணவரையும், கொளுந்தனாரையும் காரில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். சம்பவம் தொடர்பாக நான் தனியாக போலீஸ் புகார் கொடுக்கவில்லை. சம்பவம் சுமார் ½ மணி நேரம் நடந்திருக்குமா என்றால் 5 நிமிடத்தில் நடந்து முடிந்துவிட்டது. காலை 10 மணிக்கு எடப்பாடி மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள். மதியம் 12 மணிக்கு சேலம் மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். நானும் உடன் சென்றிருந்தேன். என்னை தேவூர் போலீசார் மாலை 5 மணிக்கு சேலம் மருத்துவமனையில் விசாரித்தார்கள். நான் வாக்குமூலம் எதிலும் கையொப்பம் செய்யவில்லை. போலீசார் என்னை மீண்டும் விசாரிக்கவில்லை. சா.பொ.1, 2 ஆகியவற்றை நான் போலீசில் ஒப்படைக்கவில்லை என் மகள் சித்ரா தான் ஒப்படைத்தார். சம்பவத்தின் போது இரத்த கறை படிந்த உடைகளை போலீசில் ஒப்படைத்தோம். என் கணவர் கொடுத்த புகார் வாக்குமூலம் விவரம் எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது இரு தரப்பினரும் சண்டை போட்டு கீழே விழுந்துவிட்டார்கள் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் காயம் ஆகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள் என்றால் அவர்களுக்கு காயம் ஆகவில்லை. எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் என் கணவர், கொளுந்தனார், மாமனார் மீது தேவூர்

காவல் நிலைய குற்ற எண்.59/2018 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக என் கணவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் முடிந்த பின்பு தான் கொளுந்தனார் அங்கு வந்தார் என்றால் சரியல்ல. அவரும் அருகில் தான் இருந்தார். என் கணவர் 5 நாட்கள் சிகிச்சையில் இருந்ததாக நான் போலீஸ் விசாரிணையில் சொல்லவில்லை. அதே போல் எடப்பாடி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரத்தையும் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மண் அள்ளியதற்கான ஆவணம் எதுவும் நான் போலீசிடம் ஒப்படைக்கவில்லை. நான் சொன்னது போல் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் நிலத்தில் மண் அள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் என் கணவருக்கும் இடையே நடந்த சண்டையின் போது முற்புதருக்குள் விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. 1 ம் எதிரி அரிவாளால் வெட்டவில்லை என்றாலும், 2 ம் எதிரி கல்லால் தாக்கவில்லை என்றாலும் சரியல்ல. எங்களுக்குள் எப்போதும் முன் விரோதம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-செல்லம்மாள்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.